©
தமிழ்நாடு அரசு
2016

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 4.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 5] சென்னை, புதன்கிழமை, பிப்ரவரி 3, 2016
தை 20, மன்மத, திருவள்ளுவர் ஆண்டு–2047

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2014–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண் 8/2014.**

***1937–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்***

இந்தியக் குடியரசின் அறுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் *X/1937.*

18–B எனும் பிரிவிற்கான திருத்தம்.

**2.** 1937–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் 18–B எனும் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவிற்குப் பதிலாக, பின்வரும் உட்பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

“(1). 18–A, எனும் பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும் ஆயத்தீர்வை அல்லது ஈட்டுத் தீர்வை ஒன்று கீழ்க்கண்ட அத்தகைய வீதத்திற்கு மேற்படாமல்–

(a) சாதாரண வகைகளுக்கு – புரூஃப் லிட்டர் ஒன்றுக்கு இருநூற்றி ஐம்பது ரூபாய்;

(b) நடுத்தர வகைகளுக்கு – புரூஃப் லிட்டர் ஒன்றுக்கு முன்னூறு ரூபாய்;

(c) உயர்தர வகைகளுக்கு – புரூஃப் லிட்டர் ஒன்றுக்கு ஐநூறு ரூபாய்; என்று

மாநில அரசால் அவ்வப்போது அறிவிக்கையின் வாயிலாகக் குறித்துரைக்கக்கூடியவாறு ஆயத்தீர்வை விதிக்கத்தக்க அனைத்துப் பொருட்களின் மீதும் இந்தப் பிரிவின்படி மட்டுமே விதிக்கப்படுதல் வேண்டும்–

(a) இந்தச் சட்டத்தின்படி இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கப்பட்டது;

(b) இந்தச் சட்டத்தின்படி ஏற்றுமதி செய்வதற்கு அனுமதிக்கப்பட்டது;

(c) இந்தச் சட்டத்தின்படி கொண்டு செல்வதற்கு அனுமதிக்கப்பட்டது;

(d) இந்தச் சட்டத்தின்படி வழங்கப்பட்ட உரிமம் எதனின் படியும் தயாரிக்கப்பட்டவை;

(e) இந்தச் சட்டத்தின்படி உரிமம் வழங்கப்பட்ட அல்லது நிறுவப்பட்ட வடிப்பாலை, கலவை ஆலை அல்லது பீர் வடிப்பாலை எதிலும் தயாரிக்கப்பட்டவை;

(f) இந்தச் சட்டத்தின்படி உரிமம் வழங்கப்பட்ட அல்லது நிறுவப்பட்ட வடிப்பாலை, கலவை ஆலை, பீர் வடிப்பாலை அல்லது கிடங்குகளிலிருந்து வழங்கப்பட்டவை; அல்லது

(g) இந்த மாநிலத்தின் எந்தப் பகுதியிலும் விற்பனை செய்யப்பட்டவை.

*விளக்கம்.–* இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக,–

(a) சாதாரண, நடுத்தர மற்றும் உயர்தர வகை என்பது மாநில அரசால் அத்தகையவாறு அறிவிக்கையினால் வகைப்படுத்தப்பட்ட இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபான வகைகள் என்று பொருள்படும்;

(b) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபான வகைகள் ஒன்பது பல்க் லிட்டர் அடங்கியுள்ள ஒவ்வொரு பெட்டியும் அல்லது ஒன்பது பல்க் லிட்டருக்கு குறைவாக அடங்கியுள்ள ஒவ்வொரு பெட்டியும் **6.75** புரூஃப் லிட்டர்களாக கருதப்பட்டு, அதற்கிணங்க ஆயத்தீர்வை விதிக்கப்படுதல் வேண்டும்''.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2014—ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 21—ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—

சட்ட எண் 9/2014.

***தமிழர் பண்பாட்டினைப் பிரதிபலிக்கும் உடையான வேட்டி அல்லது இந்திய பாரம்பரிய உடை அணிந்து வருவோரை மனமகிழ் மன்றங்கள், உணவகங்கள், திரையரங்குகள், பெரும் வணிக வளாகங்கள், அரங்குகள், அவைக்கூடங்கள் மற்றும் விளையாட்டரங்குகளின் உள்ளே நுழைய தடைவிதிப்பதை நீக்குவதற்கு வகைசெய்வதற்கானதொரு சட்டம்.***

சில மன்றங்கள் தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் அல்லது மேலாண்மையின்கீழ் உள்ள பொது இடங்களுக்கு வரும் நபர்கள் அவர்கள் மேற்கத்திய பாணியில் உடையை அல்லது ஆடையை அணிந்திருக்கவில்லை என்கின்ற காரணத்தின் அடிப்படையில் அதனுள்ளே நுழைவதற்கு அனுமதி மறுக்கப்படுவதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது ;

ஆகையால், ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் நமது தொன்மையான சிறப்புமிக்க பன்முகக் கூட்டுப் பண்பாட்டின் மதிப்பினை உணர்ந்து அதனைப் பாதுகாப்பது அடிப்படை கடமையாகும் ;

ஆகையால், பொது இடங்களுக்கு வருகை தரும் நபர்களை அவர்கள் அணிந்திருக்கும் உடை மேற்கத்திய கலாச்சாரத்தின் அடிப்படையில் இல்லை என்கின்ற காரணத்திற்காக, அவற்றுக்குள் நுழைய அனுமதி மறுத்து விதிக்கப்பட்டிருக்கும் தடையானது கடந்தகால ஆங்கிலப் பேரரசின் ஆதிக்கச் செயல் இன்னும் தொடர்ந்து கொண்டிருப்பதையே குறிக்கிறது.

ஆகையால், கடந்த காலத்தில் இவ்வாறான நிகழ்வுகள் ஏற்பட்டுள்ளதன் காரணத்தினால் அத்தகைய தடைகள் அகற்றப்பட வேண்டும் என்பது மிகவும் இன்றியமையாததாகிறது.

எனவே, நமது பண்பாடு, பழக்க வழக்கங்கள் மற்றும் தொன்மையான பாரம்பரியம் ஆகியவற்றைப் பாதுகாக்கும் நோக்கில், பொது இடங்களுக்குள் தமிழர் பண்பாட்டினை பிரதிபலிக்கும் வேட்டி அல்லது வேறு எந்தவொரு இந்திய பாரம்பரிய உடையை அணிந்து வருபவர்களை நுழைய அனுமதி மறுக்கும் வகையில் விதிக்கப்பட்டிருக்கும் தடையினை நீக்குவதென அரசு முடிவு செய்துள்ளது.

இந்தியக் குடியரசின் அறுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக :-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது இடங்களுக்குள் நுழைவதற்கான (ஆடைமீதான தடையை நீக்குதல்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இந்தச் சட்டம் உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

**2.** இந்தச் சட்டத்தில் தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி:—

(a) ''அரசு'' என்றால் மாநில அரசு எனப் பொருள்படும் ;

(b) ''பொது இடங்கள்'' என்பது பொதுமக்கள் பரவலாகக் கலந்துகொள்ளும் விழாக்கள், நிகழ்ச்சிகள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், விளையாட்டுகள் மற்றும் இதர நிகழ்வுகள் ஆகியன நடைபெறும் இடங்களான மனமகிழ் மன்றங்கள், உணவகங்கள், திரையரங்குகள், பெரும் வணிக வளாகங்கள், அவைக்கூடங்கள், விளையாட்டு அரங்குகள் மற்றும் அரசால் அறிவிக்கப்படும் இதர இடங்கள் என்று பொருள்படும்.

நுழைவதற்கான தடையினை நீக்குதல்.

**3.** (1) மனமகிழ் மன்றம், தனி நபர்களின் கழகம், பொறுப்புக் கட்டளை, நிறுமம் அல்லது சங்கம் எதனாலும் செய்யப்பட்ட விதி, ஒழுங்குமுறை விதி அல்லது துணை விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட சுற்றறிக்கை, அறிவுறுத்தல், வழிகாட்டுநெறி எதிலும் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும் தமிழர் பாரம்பரிய உடையான வேட்டி அல்லது பிற இந்திய பாரம்பரிய உடை எதனையும் அணிந்து வரும் நபர் எவருக்கும் அவர் அணிந்திருக்கும் உடையைக் காரணம் காட்டி அனுமதியை மறுத்தல் கூடாது.

**வரம்புரை:–** அணிந்துவரும் உடையானது நற்பாங்கான முறையில் இருத்தல் வேண்டும்.

(2) பதிவு பெற்ற அல்லது பதிவு பெறாத எந்தவொரு மனமகிழ் மன்றமோ, கூட்டமைப்போ, அறக்கட்டளையோ, நிறுவனமோ அல்லது சங்கமோ தங்கள் கட்டுப்பாட்டின் அல்லது மேலாண்மையின் கீழ் இயங்கும் பொது இடங்களில் தமிழ் பாரம்பரிய உடையான வேட்டி அல்லது இதர இந்திய பாரம்பரிய உடையணிந்து வருபவர் நுழைவதற்குத் தடை விதிக்கும் எந்தவொரு விதி, ஒழுங்குமுறை விதி அல்லது துணை விதி அல்லது சுற்றறிக்கை, அறிவுறுத்தல் அல்லது வழிகாட்டு நெறிமுறையை இயற்றுதல் கூடாது.

(3) மனமகிழ் மன்றம், கூட்டமைப்பு, பொறுப்புக்கட்டளை, நிறுமம் அல்லது சங்கம் எதனாலும் செய்யப்பட்ட விதி, ஒழுங்குமுறை விதி அல்லது துணைவிதி எதிலும் அல்லது அவற்றால் பிறப்பிக்கப்பட்ட சுற்றறிக்கை, அறிவுறுத்தல், வழிகாட்டு நெறி எதிலும் அடங்கியிருப்பது இந்தச் சட்டத்தின் வகைமுறைக்கு முரணாக இருப்பின் அது இல்லா நிலையதாகும்.

உரிமம் / அனுமதி நீக்கம் செய்யப்படுதல் வேண்டும்.

**4.** மனமகிழ் மன்றம், தனிநபர்களின் கழகம், பொறுப்புக்கட்டளை, நிறுமம் அல்லது சங்கம் எதுவும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை மீறுமேயானால் அந்த மனமகிழ் மன்றத்திற்கு, தனிநபர்களின் கழகத்திற்கு, பொறுப்புக்கட்டளைக்கு, நிறுமத்திற்கு அல்லது சங்கத்திற்கு அரசால் வழங்கப்பட்ட உரிமம் அல்லது அனுமதியை தொடர்புடைய உரிமதாரருக்கு அறிவிப்பு கொடுத்த பின்பு, நீக்கம் செய்யப்படுதல் வேண்டும்.

தண்டனை.

**5.** இந்தச் சட்டத்தின் பிரிவு 3ல் உள்ள வகை முறைகளை மீறுவோர் எவராகயிருப்பினும் ஓர் ஆண்டு சிறைத் தண்டனை மற்றும் இருபத்தைந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப் படலாகும் தண்டத்துடன் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

நிறுமங்களால் செய்யப்படும் குற்றங்கள்.

**6.** (1) இந்தச் சட்டத்தின்படி குற்றமொன்று நிறுமமொன்றினால் செய்யப்பட்டிருக்கின்றவிடத்து, அந்தக் குற்றம் செய்யப்பட்டிருந்த நேரத்தில் நிறுமத்தின் அலுவற்பணிகளை நடத்துவதற்காக நிறுமத்திற்கு பொறுப்பாக இருந்த மற்றும் பொறுப்புடையவராக இருந்த ஒவ்வொரு நபரும் அதுபோல நிறுமமும் அக்குற்றத்தைச் செய்துள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் அதன்படி அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டனை வழங்கப்படும்.

**வரம்புரை:–** ஆனால் குற்றச்சாட்டுக்கு உள்ளான நபர், குற்றம் தனது கவனத்திற்கு வரப்பெறாமல் நிகழ்ந்தது எனவும், குற்றம் நடைபெறாமல் இருப்பதற்கு தான் அனைத்து வகையான முயற்சிகளையும் மேற்கொண்டதாகவும் நிரூபிக்கும் பட்சத்தில், அவரை இந்தச் சட்டத்தின் உட்பிரிவில் உள்ள விதிமுறைகள் தண்டனைக்குள்ளாக்காது.

(2). (1)–ஆம் உட்பிரிவில் அடங்கியிருப்பது எது எவ்வாறு இருப்பினும் இந்தச் சட்டத்தின்படி குற்றம் எதுவும் நிறுமமொன்றினால் செய்யப்பட்டிருக்கிறவிடத்து மற்றும் அது நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் எவரின் செயலின் பேரில் அவருடைய சம்மதத்துடன் மறைமுக ஆதரவுடன் அல்லது கவனக் குறைவு எதனாலும் நடைபெற்றுள்ளது என்கின்ற தன்மையுடன் அக்குற்றம் செய்யப்பட்டிருக்கிறது என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறதென்றால் அத்தகைய இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் அந்தக் குற்றத்தை செய்துள்ளவராகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் அதன்படி அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டனை வழங்கப்படும்.

**விளக்கம்–** இந்தப்பிரிவின் நோக்கத்திற்காக,–

(a) ‘‘நிறுமம்’’ என்பது கூட்டுரும அமைப்பு எதுவும் மற்றும் ஒரு நிறுவகத்தை அல்லது பிற தனி நபர்களின் பிற கழகத்தையும் உள்ளடக்கும்; மற்றும்

(b) ‘‘இயக்குநர்’’ என்பது,

(i) ஒரு நிறுவகம் தொடர்பாக நிறுவகத்திலுள்ள பங்குதாரர் ஒருவர் என்று பொருள்படும்.

(ii) சங்கம், பொறுப்புக்கட்டளை அல்லது பிற தனி நபர்களின் கழகம் என்பது நேர்வுக்கேற்ப பொறுப்புக்கட்டளை அல்லது பிற கழகம், சங்கம், பொறுப்புக் கட்டளை அல்லது

சங்கத்தின் அலுவற் பணிகளின் மேலாண்மையுடன் பிற கழகத்தின், விதிகளின்படி ஒப்படைக்கப்பட்ட நபர் என்று பொருள்படும்.

**7.** (1) அரசு, அறிவிக்கையின் வாயிலாக இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது எதனையும் நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம். விதிகளைச் செய்வதற்கு அதிகாரம்.

(2) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை நாள் குறிப்பிடப்பட்டு வெளியிடப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட அந்த நாளன்று நடைமுறைக்கு வரும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும் நாள் குறிப்பிடப்பட்டு வெளியிடப்பட்டிருந்தாலன்றி அவை வெளியிடப்பட்ட அந்த நாளன்று நடைமுறைக்கு வரும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும் அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர் கூடிய விரைவில் சட்டமன்றப்பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அதனையொட்டி வரக்கூடிய கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமாயின் அல்லது அத்தகைய விதியோ அல்லது அறிவிக்கையோ அல்லது ஆணையோ செய்யப்படுதலாகாது அல்லது பிறப்பிக்கப்படுதல் கூடாது என சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமாயின் அதன்பின்பு அந்த விதியானது அந்த அறிவிக்கையானது அல்லது ஆணையானது அதன் பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே செல்திறம் பெறும் அல்லது நேர்விற்கேற்ப செல்திறம் பெறாது போதல் வேண்டும்; எனினும் அவ்வாறான மாறுதல் அல்லது அழித்தறவு எதுவும் அந்த விதியின்படி அல்லது அறிவிக்கையின்படி அல்லது ஆணையின்படி முன்னரே செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

**8.** இந்தச் சட்டத்தின் வகைமுறையை செயல்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால் அரசு ஆணை மூலமாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத வகையில் இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானவையென்றோ உகந்தவையென்றோ தனக்குத் தோன்றுகிற அத்தகைய வகைமுறையைச் செய்யலாம். இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

**வரம்புரை:–** ஆனால் அத்தகைய ஆணை எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டு கால அளவு முடிவடைந்த பின்னர் செய்யப்படுதலாகாது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2014—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2—ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண் 12/2014.**

**1987—ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2014—ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபத் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2014—ஆம் ஆண்டு மே திங்கள் 31 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

33—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 27/1989.

**2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக்குறிப்பிடப்படுவதான) 1987—ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் 33 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவின் வரம்புரையில், "மூன்று ஆண்டுகள்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக, "நான்கு ஆண்டுகள்" எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

செல்லுந் தன்மை.

**3.** முதன்மைச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும், 2014—ஆம் ஆண்டு மே திங்கள் 31—ஆம் நாளன்று மற்றும் அந்த நாளிலிருந்து செயல்திறத்துடன் சந்தைக் குழுக்களின் தனி அலுவலர் ஒருவரின் அதிகாரங்களை செயலுறுத்தும் மற்றும் செயற்பணிகளைச் செய்து முடிக்கும் ஒவ்வொரு நபரும் இந்தச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி மேற்சொன்ன சந்தைக் குழுக்களின் அத்தகைய தனி அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் 2014—ஆம் ஆண்டு மே திங்கள் 31—ஆம் நாளன்று தொடங்கும் மற்றும் இந்தச் சட்டம் **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படும் தேதியுடன் காலத்தின்போது முடிவடையும் மேற்சொன்ன தனி அலுவலர்களால் செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் இந்தச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செல்லுந்தன்மையுடன் செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையின் பின்வரும் சட்டமானது, 2014–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண் 13/2014.**

***தமிழ்நாடு மாநிலத்தில் தனியார் நபர்களால் சட்டக்கல்லூரிகள் நிறுவப்படுவதை தடை செய்வதற்கானதொரு சட்டம்.***

இந்திய அரசமைப்பின் 41–ஆம் உறுப்பின் நோக்கத்திற்கு இணங்கியவாறு, குறைந்த செலவில் சட்டக்கல்வியை வழங்குவதற்கு ஏதுவாக அரசானது, மாநிலத்தில் படிப்படியாக போதிய எண்ணிக்கையிலான அரசுச் சட்டக் கல்லூரிகளை, நிறுவுவதற்கு கொள்கை முடிவினை எடுத்திருப்பதாலும்;

மற்றும் தனியார் நபர்கள் பொருளாதாரத்திலும் சமூகத்திலும் பின்தங்கிய பிரிவினர்களுக்கு குறைந்த செலவில் சட்டக்கல்வியை அளிக்கமுடியவில்லை என்பதை கடந்த கால அனுபவங்கள் எடுத்துரைப்பதாலும் மற்றும் அவர்களால் சட்டக்கல்லூரியைத் தொடர்ந்து நடத்த முடியவில்லை என்பதாலும்;

அதன் காரணமாக அரசானது மாநிலத்தில் தனியார் நபர்கள் சட்டக்கல்லூரிகளை நிறுவுவதை தற்பொழுது தடை செய்ய முடிவு செய்துள்ளது.

இந்தியக் குடியரசின் அறுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டமானது, 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் சட்டக்கல்லூரிகள் நிறுவுதல் (தடை செய்தல்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

**2.** இந்தச் சட்டத்தின், தறுவாயின் தேவை வேறானாலன்றி,–

(a) ''அரசு'' என்பது மாநில அரசு என்று பொருள்படும்;

(b) ''சட்டக் கல்லூரி'' என்பது சட்டப் பட்டங்களுக்காக, பட்டயங்களுக்காக அல்லது பல்கலைக்கழகத்தின் பிற கல்வி சிறப்பு சீர்மைகளுக்காக தேர்வில் அனுமதிப்பதற்காக சட்டத்தில் பாடப்பிரிவு அல்லது பயிற்சி எதையும் அளிக்கின்ற ஒரு கல்லூரி அல்லது நிறுவனம் என்று பொருள்படும்;

(c) ''தனியார் நபர்'' என்பது பொறுப்புக் கட்டளைகளை, சங்கத்தை, தனிநபர்களின் கழகத்தை அல்லது நிறுமத்தை கூட்டுருமமாக இருப்பினும் அல்லது இல்லாதிருப்பினும் அல்லது பிற தனியார் அமைப்பு எதையும் அல்லது நபர்களின் தொகுதியை, சட்டத்தால் ஏற்பளிக்கப்பட்டிருப்பினும் அல்லது ஏற்பளிக்கப்படாதிருப்பினும் அல்லது தனிப்பட்ட நபரை அல்லது தனிப்பட்ட நபர்களை உள்ளடக்கும்;

தமிழ்நாடு சட்டம் 43/1997.

(d) ''பல்கலைக்கழகம்'' என்பது, 1996–ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகச் சட்டத்தின், 3–ஆம் பிரிவின்படி நிறுவப்பட்டுள்ள டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் என்று பொருள்படும்.

தனியார் நபர்கள் சட்டக்கல்லூரிகளை நிறுவுதல் கூடாது.

**3.** (1) தனியார் எவரும் பல்கலைக்கழக சட்டப் பட்டங்களுக்கான அல்லது பட்டயங்களுக்கான அல்லது பிற கல்வி சிறப்பு சீர்மைகளுக்கான தேர்வுகளுக்கு, அனுமதிப்பதற்காக, சட்டத்தில் பாடப்பிரிவு, பயிற்சி எதையும் அளிப்பதற்காக சட்டக்கல்லூரி அல்லது நிறுவனம் எதையும் நிறுவுதல் கூடாது.

(2) பிற சட்டம், தீர்ப்பு அல்லது ஆணை எதிலும் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும் பல்கலைக்கழகத்தின் சட்டப்பட்டங்களுக்கான, பட்டயங்களுக்கான அல்லது பல்கலைக்கழகத்தின் பிற சிறப்புக் கல்விச் சிறப்பு சீர்மைகளுக்கான தேர்வுக்கு அனுமதிப்பதற்காக சட்டத்தின் பாடத்தை பயில அல்லது பயிற்சியை அளிக்கும் சட்டக்கல்லூரியை அல்லது நிறுவனம் எதையும் தனியார் நபர் எவரும் நிறுவுவதற்கு அரசால் அல்லது பல்கலைக்கழகத்தால் அனுமதி அல்லது சான்றிதழ் வழங்கப்படுதலாகாது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2014–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண் 14/2014.**

***2004–ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக் கழகத் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

11–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக்குறிப்பிடபடுவதான) 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகச் சட்டத்தின், 11–ஆம் பிரிவில் (1)–ஆம் உட்பிரிவிற்குப் பதிலாக, பின்வரும் உட்பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:- தமிழ்நாடு சட்டம் 9/2005.

“(1) தமிழ்நாடு மாநிலத்தில் விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன் துறையை தம்முடைய பொறுப்பில் கொண்டுள்ள அமைச்சர் அவர்கள் பல்கலைக்கழகத்தின் இணைவேந்தராக இருத்தல் வேண்டும்.’’.

27–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின், 27–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில் (c) எனும் கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

“(c) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையினை தம்முடைய பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;’’.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2014–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண் 15/2014.**

***1967–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியின்மையைத் தடுக்கும்) சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியின்மையைத் தடுக்கும்) இரண்டாவது திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2013–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 27–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 3/1967.

இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்

2. 1967–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியின்மையைத் தடுக்கும்) சட்டத்திற்கான இணைப்புப் பட்டியலிலுள்ள பிரிவு –2ற்குரிய இனம் 11–இல் உள் இனம் 94 ற்குப்பதிலாக பின்வரும் உள் இனம் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

“94. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்”.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2014–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண் 16/2014.**

**2007– ஆம் ஆண்டு தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன்பிடிப்பதிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம் 2014– ஆம் ஆண்டு தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன்பிடிப்பதிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திருத்தச் சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

9–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 19/2007.

2. 2007– ஆம் ஆண்டு தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன்பிடிப்பதிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டத்தின் 9–ஆம் பிரிவில், – (4) – ஆம் உட்பிரிவில், (vi) எனும் கூறில், "பொதுப் பணி மற்றும் வனத் துறைகள்" என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக, "பொதுப்பணி, மீன்வளம் மற்றும் வனத்துறைகள்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2014–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண் 17/2014.**

**1982–ஆம் ஆண்டு தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, அரசு அறிவிக்கையின் வாயிலாக குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 33/1982.

8–A எனும் பிரிவிற்கான திருத்தம்.

2. 1982–ஆம் ஆண்டு தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தின், 8-A எனும் பிரிவில் விளக்கத்தில், (b) எனும் கூறில், (i) எனும் உட்கூறுக்காக பின்வரும் உட்கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"(i) மைய அரசு, மைய அரசு பொறுப்பேற்பு நிறுவனங்கள் மாநில அரசு அல்லது ஒன்றியத்து ஆட்சி நிலவரைக்குட்பட்ட நிர்வாகம் எதுவும்;".

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட(ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.